**செய்தி வெளியீடு எண்: 068** **நாள்: 26.01.2019**

# அரசால் செயல்படுத்த முடியாத கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் எனவும், உடனடியாக பணிக்கு திரும்பவும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் நிர்வாக சீர்த்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோள்

ஒரு அரசு என்பது மக்கள் நலப் பணிகளையும், வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தும் ஒரு அமைப்பாகும். அரசின் முதன்மை நோக்கம் மக்கள் பணியே. ஏழாவது ஊதியக்குழு பரிந்துரையை அமல்படுத்திய போது பணப்பயன் 1.10.2017 முதல் வழங்கியதால் எற்பட்ட ஊதிய நிலுவை, இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான சம்பளம் போன்றவை அரசின் நிதி நிலையை கருத்தில் கொண்டு செயல்படுத்த இயலாது என தெரிவித்த பின்பும், ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பின் கீழ் செயல்படும் பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும் கடந்த 22.1.2019 முதல் காலவரையற்ற தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இச்சங்கங்கள் வலியுறுத்தி வரும் கோரிக்கைகள் யாவும் அரசால் பரிசீலிக்கப்பட்டு செயல்படுத்த இயலாது என பலமுறை தெரிவித்தும், அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் தவறான பிரச்சாரத்தின் அடிப்படையில்

அவர்களின் உணர்வுகளை தூண்டிவிட்டு, போராட்டத்தை தொடங்கி, சில தீவிரமான வழிமுறைகளை அவர்கள் தற்போது கடைபிடிக்கக் தொடங்கியிருப்பது வேதனை அளிக்கிறது. இவர்களின் சில கோரிக்கைகளை ஏன் நிறைவேற்ற இயலாது என்பதை பொதுமக்களும், நடுநிலையான அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

**1) புதிய ஓய்வு ஊதியத் திட்டத்தை கைவிடுவது:**

இந்தியாவிலும், பிற நாடுகளிலும் ஓய்வூதியச் செலவு சுமை ஆண்டுதோறும் பன்மடங்கு அதிகரித்து வந்த நிலையில், வளர்ச்சிப் பணிகளையும், மக்கள் நலப் பணிகளையும் செயல்படுத்திட தேவையான நிதியே இல்லாமல் போகும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதால் 174 நாடுகளும், இந்தியாவில் மேற்கு வங்கம் தவிர, மத்திய அரசும், பிற மாநிலங்களும் பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு பதிலாக புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளன.

ஆண்டுதோறும் உயர்ந்துவரும் ஓய்வூதிய நிதிச் சுமையால் ஓய்வூதியம் தொடர்ந்து வழங்க இயலாத நிலை ஏற்படுவதுடன், அரசு ஊழியர் சம்பளம் உள்ளிட்ட நிர்வாக செலவை ஈடுகட்ட முடியாமல் திவாலாகிவிடும் நிலை ஏற்படும் என வல்லுநர்கள்

கருத்து தெரிவித்த நிலையில், புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் பல நாடுகளில் செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 2003ஆம் ஆண்டிலேயே இதற்கான சட்டம் இயற்றப்பட்டு, அரசு சார்பில் 10 சதவீதமும், ஊழியர் சார்பில் 10 சதவீதமும் பிடித்தம் செய்யப்பட்டு, ஓய்வூதிய நிதியத்தில் இருப்பு வைக்கப்பட்டு வருகிறது. பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தினால், மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதியே இல்லாமல் போவதுடன், அரசு வசூலிக்கும் வரியுடன் கடன் பெற்றுத்தான் சம்பளமும், ஓய்வூதியமும் தரவேண்டிய நிலை ஏற்படும். இதை அரசு ஊழியர்களும் நன்கு அறிவார்கள். மாண்புமிக புரட்சித்தலைவி அம்மா அவர்களும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த சாத்தியக்கூறுகள் உள்ளதா என ஆராய குழு அமைப்போம் என்று தான் உறுதி அளித்தார்களே தவிர, புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வோம் என்று உறுதியளிக்கவில்லை. அதன்படி அமைத்த அந்தக் குழு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த சாத்தியக்கூறு இல்லை என்றும், அவ்வாறு செய்தால் அரசு பெறும் வரி வருவாயைவிட கூடுதலாக சம்பளத்திற்கும், ஓய்வூதியத்திற்கும் செலவு செய்ய வேண்டி வரும் என்றும், சில ஆண்டுகளுக்குப்

பிறகு எந்த மக்கள் நலத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் செயல்படுத்த நிதி இருக்காது என்றும் தெரிவித்துள்ள நிலையில், அரசு மக்களுக்காக இயங்க வேண்டுமே தவிர, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளம்/ஒய்வூதியம் வழங்க மட்டுமே இயங்கக் கூடாது என்று கருதித் தான் இந்தக் கோரிக்கையை, அரசின் நிர்வாக நலனையும், பொதுமக்கள் நலனையும் கருத்தில் கொண்டு இதை ஏற்க இயலாது என அரசு கருதுகிறது. இந்நிலையில், எந்த அரசாலும் இந்தக் கோரிக்கையை ஏற்க இயலாது. இதை மக்களும் உணர்ந்து கொள்வார்கள். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் கூட உணர்ந்து கொள்வார்கள் எனக் கருதுகிறேன்.

**2) ஊதிய உயர்வு நிலுவை வழங்குதல்:**

ஒவ்வொரு முறையும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கும்போது அரசின் நிதி நிலைக்கேற்ப, கருத்தியலாக ஒரு தேதியிலிருந்தும், பணப்பயனுடன் ஒரு தேதியிலிருந்தும் வழங்குவது இயல்பான ஒன்றுதான். அதனால் தான் இந்த முறையும் **1.1.2016** முதல் கருத்தியலாகவும், **1.10.2017** முதல் பணப்பயனுடனும் ஊதிய

உயர்வு வழங்கப்பட்டது. ஆறாவது ஊதியக்குழு பரிந்துரை அமல்படுத்திய போதும் கருத்தியலாக 1.1.2006 முதலும், பணப்பயனுடன் 1.1.2007 முதலும் தான் ஊதிய உயர்வு அமல்படுத்தப்பட்டது. ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைப்படி ஊதிய உயர்வு வழங்கியதால் அரசுக்கு ஆண்டுக்கு 14,500 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்டாலும், அறிக்கை பெற்ற உடனே அரசு ஊதிய உயர்வை அமல்படுத்தியது. இதனால், அரசின் வருவாய் பற்றாக்குறை (அதாவது அரசுக்கு கிடைக்கும் வருவாயை விட கூடுதல் செலவு) 2017–18ஆம் ஆண்டில் 21,594 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. இந்த ஆண்டு வருவாய் பற்றாக்குறை 24,000 கோடி ரூபாயாக உயரும். இதை அரசு வெளிச்சந்தையில் கடன் பெற்றுத்தான் செலவு செய்கிறது. இந்நிலையில், ஊதிய நிலுவை வழங்க வேண்டும் என்றால் அதற்காக 20,000 கோடி ரூபாய் கூடுதலாக நிதி தேவைப்படுகிறது. இதையும் அரசு கடன் பெற்றுத்தான் வழங்க முடியும். கூடுதல் கடன் சுமையை சமாளிக்க வேண்டுமென்றால் மக்கள் மீது கூடுதல் வரிச் சுமையை திணிப்பது ஒன்றே வழியாகும். இதை அரசு தவிர்க்கவே கருதுகிறது. இதனால் அரசின் கடன் சுமை மேலும் அதிகரிக்கும் என்பதாலும்,

நிதிநிலை பொறுப்புடைமைச் சட்ட வரம்பான மூன்று சதவீதம் அளவை நிதிநிலைக் குறியீடுகளான நிதிப் பற்றாக்குறை மீறும் என்பதாலும், முந்தைய ஊதியக்குழு கடைபிடித்த வழிமுறையையே பின்பற்றி சம்பள உயர்வு கருத்தியலாக **1.1.2016** முதல் வழங்கப்பட்டது. பணப்பயன் **1.10.2017** முதல் வழங்கப்பட்டது. எனவே, தற்போதைய அரசின் நிதிநிலையில் இவர்களின் இந்தக் கோரிக்கை ஏற்க இயலாது என்பதை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

**3) இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசின் ஊதியம்:**

மத்திய அரசில் இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. ஆனால் மாநில அரசில் இவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். மேலும் இதே கல்வித் தகுதியில் பிற அரசுப் பணிகளிலும் அரசு ஊழியர்கள் பணிபுரியும் நிலையில், இடைநிலை ஆசிரியர்களுக்கு மட்டும் ஊதிய உயர்வு தர இயலாது. அனைவருக்கும் ஊதியத்தை உயர்த்தித் தந்தால் மேல்நிலையில் உள்ளவர்களுக்கும் ஊதியத்தை உயர்த்த வேண்டிய நிலை வரும். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் பல ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் செலவு

ஏற்படுவதுடன், அரசு ஊழியர்களுக்கிடையே உள்ள ஒப்பீட்டுச் சமநிலையை (horizontal and vertical parity) இது வெகுவாக பாதிக்கும். எனினும், இதே கல்வித் தகுதியுள்ள பிற பணியாளர்களை விட இடைநிலைஆசிரியர்களுக்கு கூடுதலாக மாதம் **2,000** ரூபாய் சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. இதனால்தான், இந்தக் கோரிக்கையை செயல்படுத்த இயலாது என பலமுறை தெரிவித்தும், இப்போது போராட்டத்தில் அவர்கள் ஈடுபடுவது அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்ற உள்நோக்குடன்தான் இச்சங்கங்களும் அதன் பிரதிநிதிகளும் ஈடுபட்டுள்ளனர் என்பதைத் தான் காட்டுகிறது. இடைநிலை ஆசிரியர்கள் **2003–**ற்கு பிறகு பணியில் சேரும் போதே, புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தான் பணிபுரிய வேண்டும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். இதை பொதுமக்கள் நன்கு உணர்ந்து கொள்வார்கள் எனக் கருதுகிறேன்.

இதுபோன்ற செயல்படுத்த முடியாத கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், பிற தனியார் நிறுவனங்களைக் காட்டிலும் அதிக சம்பளம் பெறுகின்றனர் என்பதை உணர வேண்டும். அவர்கள் தற்போது பெற்று வரும் கீழ்க்கண்ட சம்பள அளவுகளே இதை நன்கு விளக்கும்:–

| அரசு ஊழியர்கள் | | | | ஆசிரியர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண். | பதவி மற்றும் ஊதிய நிலை | பணியில் சேர்ந்தவுடன் (ரூபாயில்) | சராசரி சம்பள அளவு (ரூபாயில்) | வ. எண். | பதவி மற்றும் ஊதிய நிலை | பணியில் சேர்ந்தவுடன் (ரூபாயில்) | சராசரி சம்பள அளவு (ரூபாயில்) |
| அரசு அமைச்சு பணியாளர்கள் | | | | | | | |
| 1. | அலுவலக உதவியாளர் (ஊ.நி.1) | 18840 | 28560 | 1. | இடைநிலை ஆசிரியர் (ஊ.நி.10) | 24720 | 35400 |
| 2. | ஓட்டுநர் (ஊ.நி.8) | 23400 | 35400 | 2. | பட்டதாரி ஆசிரியர் (ஊ.நி.16) | 43680 | 66120 |
| 3. | இளநிலை உதவியாளர் (ஊ.நி.8) | 23400 | 35400 | 3. | முதுநிலை ஆசிரியர் (ஊ.நி.18) | 44280 | 66840 |
| 4. | உதவியாளர் (ஊ.நி.10) | 24720 | 37440 | 4. | தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் (ஊ.நி.15) | 43440 | 65880 |
| 5. | கண்காணிப்பாளர் (ஊ.நி.18) | 44280 | 66840 | 5. | நடுநிலை தலைமையாசிரியர் (ஊ.நி.17) | 44040 | 66600 |
| தலைமைச் செயலக பணியாளர்கள் | | | | 6. | உயர்நிலை தலைமையாசிரியர் (ஊ.நி.18) | 44280 | 66840 |
| 1. | உதவியாளர் (ஊ.நி.9) | 24000 | 36360 | 7. | மேல்நிலை தலைமையாசிரியர் (ஊ.நி.23) | 68280 | 103320 |
| 2. | உதவி பிரிவு அலுவலர் (ஊ.நி.16) | 43680 | 66120 | பகுதிநேர பணியாளர்கள் | | | |
| 3. | பிரிவு அலுவலர் (ஊ.நி.22) | 67320 | 101880 | 1. | சத்துணவு அமைப்பாளர்/ அங்கன்வாடி பணியாளர் (ஊ.நி.4) | 10053 | 14495 |
| 4. | சார்புச் செயலாளர் (ஊ.நி.25) | 71160 | 107640 | 2. | சத்துணவு சமையலர் / அங்கன்வாடி உதவியாளர்(ஊ.நி.2) | 6429 | 8500 |
| 5. | துணைச் செயலாளர் ஊ.நி.26) | 74280 | 107640 | | | | |
| 6. | இணைச் செயலாளர் ஊ.நி.29) | 148080 | 223920 | | | | |

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் எப்போதும் எந்த தயக்கமும் காட்டியதில்லை. பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் கேட்காமலேயே பரிசீலித்து நிவர்த்தி செய்துள்ளதுடன், ஊதிய உயர்வு, காலமுறை ஊதியம், அகவிலைப்படி உயர்வு போன்றவற்றை, அரசு கடுமையான நிதிநிலையை சந்தித்து வந்தபோதும் உடனுக்குடன் வழங்கி வருகிறது.

**தமிழ்நாடு அரசின் 2018–19 வரவு செலவு திட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண். | செலவு இனங்கள் | செலவுத் தொகை (கோடியில்) (சதவீதம்) |
|---|---|---|
| 1. | அரசின்மொத்த வரி வருவாய் மற்றும் மத்திய அரசின் வருவாய் மற்றும் திட்ட நிதி | 1,64,950 கோடி ரூபாய் |
| 2. | சம்பள செலவு | 52,171 கோடி ரூபாய் (31.63 சதவீதம்) |
| 3. | ஓய்வூதிய செலவு | 25,362 கோடி ரூபாய் (15.37 சதவீதம்) |
| 4. | நிர்வாக செலவு | 10,837 கோடி ரூபாய் (6.57 சதவீதம்) |
| 5. | வருடத்திற்கு அரசு செலுத்தும் வட்டித் தொகை | 28,729 கோடி ரூபாய் (17.42 சதவீதம்) |
| | சம்பளம், ஓய்வூதியம், நிர்வாகச் | 1,17,099 கோடி ரூபாய் |

| | | |
|---|---|---|
| | செலவு மற்றும் வட்டி மொத்தத் தொகை | (71 சதவீதம்) |
| 6. | மக்கள் நலத் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும் நிதி | 47,851 கோடி ரூபாய் (29 சதவீதம்) |

மேற்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு, 47,851 கோடி ரூபாயுடன் பொதுக் கடன் பெற்றுத் தான் அரசு மக்கள் நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இந்த சங்கடங்களையெல்லாம் நடுநிலையான அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நன்கு அறிவார்கள். ஆனால் சிலர் சங்கம் நடத்த வேண்டும் என்பதற்காகவும், தங்கள் பிரச்சனைகளை அரசியல்படுத்துவதற்காகவும், அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் தூண்டிவிட்டு, தவறான பாதையில் வழிநடத்துகின்றனர். **மேலும், 5000 அரசுப் பள்ளிகளை மூடுவதாகவும், 3500 அரசுப் பள்ளிகளை இணைப்பதாகவும் தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்புகின்றனர்.** இது முற்றிலும் தவறான செய்தியாகும். இவர்களின் உள்நோக்கத்தை புரிந்து கொண்டு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் விழிப்போடு இருப்பதுடன்,

அரசின் நோக்கம் மக்கள் நலம் காப்பதே என்ற உண்மையும், எண்ணற்ற படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் திண்டாடி வரும் நிலையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வளர்ச்சிப் பணிகளை அரசு தான் செய்ய வேண்டும் என்பதையும் உணர்ந்து, தற்போதைய நிதி நிலையில், அரசின் நிர்வாக முன்னுரிமையைக் கருத்தில்கொண்டு, இதுபோன்ற தேவையற்ற போராட்டத்தை தூண்டி விடும் சங்கங்கள் வீசும் சதி வலையில் விழாமல், அரசுக்கு ஒத்துழைப்பு நல்கி மக்கள் பணியை தொய்வின்றி தொடர்ந்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். எனவே, மாணவர்களின் கல்விக்கும், மக்கள் பணிக்கும் **இடையூறு ஏற்படுத்தும் போராட்டங்களை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மேலும், தொடர்ந்து பணிக்கு செல்லாமல் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**